Issue 35

## கிறிஸ்டடெல்ஃபியர்கள் யார் ?

கி றி ஸ் ட டெ ல் ஃ பி ய ன் ஸ் (Christadelphians) என்ற பதம் கிரேக்க மூலமொழிகளாகிய Christ மற்றும் adelphos என்ற பதங்களிலிருந்து உருவானது. இதன் அர்த்தம் "கிறிஸ்துவில் சகோதரர்" என்பதாகும். கிறிஸ்டடெல்ஃபியன்ஸ் என்ற உலகளாவிய கிறிஸ்தவ சமுதாயம் 'வேதாகமத்தில் முழுமையாக நம்பிக்கை வைக்கிற' மக்கள் கூட்டமாகும். வேதவாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை என்று உறுதியாக நம்புகிறார்கள்.

நாங்கள், தேவனுடைய (ஒரே பேறான) குமாரனாகிய இயேசு கிறிஸ்து வல்லமையோடு பூமிக்குத் திரும்பி வருவார் என்றும், அவர் வருத்தங்கள், அக்கிரமம், ஆக்கிரமிப்புகளை நீக்கி, தமது ஜனங்களுக்கு நியாயத்தையும், சமாதானத்தையும், நீதியையும் கொண்டு வருவார் என்றும் நம்புகிறோம்.

நாம் மரித்தாலும், மரித்தோரிலிருந்து எழும்பி, நியாயந்தீர்க்கப்படுவோம் என்று நம்புகிறோம். அத்துடன், இப்போது வாழும் வாழ்க்கையில் தன்னயமும் பொல்லாங்கும் நிறைந்து வாழ்ந்தவர்கள் நித்தியத்துக்கு வாழமுடியாமல் அழிக்கப்படுவார்கள். அதற்கு மாறாக, தேவனுடைய வார்த்தையை நம்பி கீழ்ப்படிந்து ஜீவித்தவர்கள் நித்தியமாக ஜீவித்திருப்பார்கள். மேலும் ஒவ்வொருவரின் வாழ்விலும் இரண்டு முக்கியமானவைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று விசுவாசிக்கிறோம். அவைகளில் (1) தேவனிடம் முழு இருதயத்துடன் அன்பு கூர வேண்டும். (2) உன்னைப் போல பிறரை நேசிக்க வேண்டும்.

ஒருங்கிணைப்பாளர் : லினஸ் டேனியேல்
Email : linus@choose2live.info

வேதத்தின் சத்தியத்தை கேளுங்கள்
http// www.choose2live.info/new_creation

இந்தியாவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 4237
Bangalore - 560042. INDIA.

ஸ்ரீலங்காவில் இலவச பிரதிக்குத் தொடர்பு முகவரி :
**The Christadelphians,**
P.O. Box 60,
Negombo - 11500,
SRI LANKA
Email : slcbm2@slnet.lk
Website: www.readthebible.lk

### புது சிருஷ்டி பதிப்பாளர் குழு

**லினஸ் டேனியேல் : தலைமை ஒருங்கிணைப்பாளர்**
**ராஜபட்சம் ஆனந்தா : மொழிபெயர்ப்பு, பதிப்பு மற்றும் கணினி ஒருங்கிணைப்பாளர்**
**பவித்ரா : நிர்வாகம், உபப்பதிப்பாளர்**

**திருமதி கிலாடிஸ் சுகிர்தராஜ். சந்திர மோகன் மற்றும் திருமதி சாந்தி பவுல் அவர்களின் தமிழ் மொழிபெயர்ப்பு உதவிகளுக்காக சிறப்பான நன்றி கூறுகிறோம்.**

இந்த பத்திரிகையின் வாயிலாக, வேதவாக்கியங்களை வாசிக்க உங்களைத் தூண்டுவதே எங்கள் குறிக்கோள். இதிலுள்ள கட்டுரைகள் உங்களை ஆவிக்குரிய வளமூட்டி வளர்க்க உற்சாகப்படுத்தும் என நம்புகிறோம். நம்மை இரட்சிப்புக் கேற்ற ஞானமடையச் செய்வதால் வேதாகமத்தைத் தினமும் வாசிக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

இந்த பத்திரிகையில் காணப்படும் எல்லா கட்டுரைகளும் அனைத்துலக கிறிஸ்டடெல்ஃபிய வழிமுறை யிலிருந்து தெரிந்தெடுத்து மொழி பெயர்ப்பு செய்து பிரசுரமாகியுள்ளன.

*"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" (2. கொரிந்தியர் 5:17).*



# மகிழ்ச்சி - நாமே தெரிந்துகொள்வது

ஆபிரகாம் லின்கன் ஒருமுறை இவ்வாறு சொன்னார், "அநேக மக்கள் தங்கள் மனதை எப்படி வைத்துக்கொள்கிறார்களோ, அதற்குத்தக்க அவர் கள் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள்". அவர் சரியாகத்தான் சொல்லியிருக் கிறார்.

*"அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்"* (நீதிமொழிகள் 23:7). சந்தோஷமாயிருக்கவும் முற்போக் கான சிந்தையுடையவர்களா யிருக்கவும் நாமே தெரிந்துகொண்டு, வாழ்க்கையின் அதிகமான நன்மையை அனுபவிக்கலாம். நம் உள்ளான மகிழ்ச்சி மற்றும் சமாதானம் பறிப்போகும் விதத்தில், தினசரி வாழ்க்கையின் அழுத்தங்கள் நம்மை நொறுக்கவும் அதில் நாம் புதைந்துபோகவும் இடமளிக்கக்கூடாது. *"நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு நீ ஜீவனைத் தெரிந்துகொள்"* (உபாகமம் 30:19) என மோசே இஸ்ரவேலுக்குக் கூறுகிறார்.

தேவன் ஒருவர் இருக்கிறார்; தெரிந்துகொள்ளும் உரிமையை அளிக்கிறார் என்பது அநேகருக்குத் தெரியவில்லை. மகிழ்ச்சி - மகிழ்ச்சியற்ற நிலை இவைகளில் ஒன்றை நாம் தெரிந்துக் கொள்ளக்கூடும் என்பதை சில சமயங்களில் மறந்துவிடுகிறோம். உண்மையானதும் நீடித்து நிற்கக் கூடியதுமான மகிழ்ச்சி எது? தேவனிலும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவிலும் நிலைத்திருந்தால் தான் உண்மையும் நிலையான துமான மகிழ்ச்சியை அநுபவிக்க முடியும். இதற்குக் குறைவான எதுவும் போலிதான். உடைமைகள் நீடித்து நிற்கும் சந்தோஷத்தைத் தர முடியாது. பணமும் இதைச் செய்யாது. நண்பர்கள், இன்பங்கள், பொழுது போக்குகள் (தேவனுக்கு முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்டவைத் தவிர பிற விருப்பச் செயல்கள் -எல்லாமே உதவாமற் போய்விடும். வேறு எதற்கும் இடங்கொடாமல், நம் பரமபிதாவை நேசிக்கவும் அவருக்குக் கீழ்ப்படிந்து அவரையே சேவிக்கவும் நம் மனதில் ஒரே தீர்மானமாக நிலைத்து நிற்கும்படி அர்ப்பணிப்போமாக. அப்போது நாம் நிஜமான, உண்மை யான சந்தோஷத்தை அனுபவிப்போம் -அதற்கு ஈடு இணை எதுவுமே இல்லை - ஆம், இவ்வுலகின் செல்வங்கள் எதுவுமே இதற்கு ஈடு இல்லை.

*"மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?"* (மத்தேயு 16:26).

# ஆராதனை

ஆராதனை என்பது ஞாயிறு ஆராதனைக்காக கூடுவதைவிட அதிக மானது. உண்மையில், அது ஒரு வாழ்க்கை வழி. ஆராதனை என்பது நாம் தேவனுக்கு திருப்ப தரும் நன்றி கடன் தேவனுக்கு மகி மை செலுத்தும் வழி.-இந்த அத்தி யாயத்தில், ஏன் ஆராதிக்கிறோம் என்பதையும், நாம் ஆராதனை செய் யும் வழிமுறைகள் பற்றியும் பார்ப் போம்.



**கவன ஈர்ப்பு: மாற்கு 14:1-9**

இயேசுவைப் பரிமள தைலத்தினால் அபிஷேகஞ் செய்ய ஒரு பெண்ணுக்கு இது தவிர வேறொரு நல்ல அவகாசம் கிடைப்பது அரிது. இயேசு இன்னும் இரண்டு நாட்கள் சென்றப்பின் தாம் மரிக்கப்போவதை அறிந்திருந்தார் - அவர் தனிமையாக இருந்தார். அவர் தம்மைக் காட்டிக் கொடுத்தவனோடு பந்தியிருந்தார். தம்மைப் புரிந்திராத நண்பர்களுடனும் அவர் உணவருந்தினார். அந்த வேளையில் ஒரு பெண் மிகப்பணிவுடன் இயேசுவிடம் வந்தாள். தன் கையில் வைத்திருந்த தைலக்குப்பியின் தலையை உடைத்தார். அதிலிருந்த வாசனை திரவியத்தை அவர் தலைமேல் ஊற்றினாள். அந்த பரிமளதைலம் அவர் முகத்தில் வழிந்தோடியது. அதைக்கண்ட சீஷர்களின் மனதில், அவளுடைய உள்ளத்தை கொள்ளைக் கொண்டிருந்த அன்பின் ஆற்றலால் அவள் செய்த ஆராதனையைப் பழிக்கச் செய்தது.

1. ஏன் இயேசு, வசனம் 6-ல் "என்னிடத்தில் அவள் நற்கிரியைச் செய்திருக்கிறாள்" என்று ஏன் சொல்லவேண்டும்?
2. பஸ்கா பண்டிகை முன் மாலைப்பொழுதில் ஏழைகளுக்குத் தானம் செய்வது யூதர்களின் பழக்கமாக இருந்தது. அவருடைய சீஷர்கள் சொன்ன குற்றச்சாட்டு (மத்தேயு 26:8) நியாயமானதா?
3. அந்த பரிமள தைலத்தின் விலைக்கிரயம் ஒரு வருட கூலி அல்லது சம்பளத்துக்கு ஈடானது. நீங்கள் இந்த அளவு விலையுள்ள ஒன்றை அல்லது அதற்கீடான பணத்தை ஊழியத் துக்கென்று



கொடுப்பீர்களா? இது தேவனுக்கென்று செய்யப்பட் டதா அல்லது அற்பமான (கண்மூடித்தனமான) செயலா?

4. இந்த செயல் எந்த விதத்தில் ஆராதனைக்கு ஈடாகும்?

## உண்மையான ஆராதனை

உலகமுழுவதும் உள்ள மக்கள் ஜாதி மதபேதம் எதுவாக இருந்தாலும் எதையாவது ஆராதிக்க முற்படுகின்றார்கள். ஆஸ்திரேலிய பழங்குடியினர் மண்ணை வணங்கினர். எகிப்திய மூதாதையர் இயற்கையின் தேவர்களை ஆராதித்தனர். ஜப்பானியர் தங்கள் சக்ரவர்த்தியை ஆராதித்தார்கள். இன்று பலர் பொருள் வடிவத்தை வணங்கி வருகின்றனர். சிலருக்கு வீரர்களும், வேறு சிலருக்கு கதாநாயகர், நடிகைகள், அடிப்படை மனித உரிமை, குடியரசு, சுதந்திரம் மற்றும் ஒற்றுமை சமாதானம் என்பவை ஆராதிக்கும்படி உள்ளனர்.

நாம் யாருக்கு மரியாதை கொடுக்கிறோமோ அவர்களை வணங்கு கிறோம். ஏன் மனிதர்கள் ஒன்றை மதிக்கவும் ஆராதிக்கவும் விரும்புகி றார்கள்? இதற்கு விடை மிகவும் சாதாரணமானது - தேவன் தம்மை வணங்கும்படி மனிதனைப் படைத்தார். நம் ஒவ்வொருவரிடத்திலும் நம்மைவிட சிறந்தவரை ஆராதிக்கவேண்டும் என்ற வாஞ்சை இருந்து கொண்டேயிருக்கிறது.

## சில பொருத்தமான வேதபகுதிகள்

**தவறான ஆராதனை:** யாத்திராகமம் 23:24-25; 34:14; எண்ணாகமம் 25:3-ரு; உபாகமம் 4:19; 5:9; 8:19; 12:2-7; நியாயாதிபதிகள் 2:12-19; க.ராஜாக்கள் 12:28-33; 2.ராஜாக்கள் 17:24:41; தானியேல் 3:1-30; மத்தேயு 23:23-27.

**உண்மை ஆராதனைக்கு உதாரணங்கள்:** 2.நாளாகமம் 29:20-36; நெகேமியா 8:1-8; யோபு 1:20-22; தானியேல் 6:1-28; சகரியா 14:16-21; மத்தேயு 2:1-12.

**புதிய ஏற்பாட்டில் ஆராதனைக்குரிய கற்பனைகள்:**

மத்தேயு 22:34-40; யோவான் 4:19-24; ரோமர் 12:1- 1.கொரிந்தியர் 11:17-34; எபேசியர் 5:19-20; கொலோசெயர் 3:16.

வேதாகமத்தின் மூலம் நாமறியும் ஆண்டவராகிய சர்வவல்ல சிருஷ்டிகர் இருக்கிறார் என்ற சத்தியம் மேலானதும் மறுக்கமுடியாததுமான ஒன்றாகும். எனினும் பெரும்பான்மையோர் பொய்யான தேவர்களை விரும்பி, சத்தியத்தைப் புறக்கணிக்கின்றனர். அவ்வாறு சத்தியத்தைப் புறக்கணிக்கிறவர்கள் நித்திய அழிவுக்கென்று கிரயம் செலுத்துகிறார்கள்.

சத்தியத்துக்கு அறிந்து தெரிந்து புறம் காண்பித்து பொய்யை நாடுகிற விசுவாசமில்லாதவர்களுக்கு ஏன் நல்ல பரிசுகளைக் கொடுக்கவேண்டும்? ஆதலால், உண்மை ஆராதனை என்றால் என்ன? இயேசு மெய்யான ஆராதனை எது என்பதை இரத்தின சுருக்கமாகக் கூறியுள்ளார்: (மத்தேயு 22:37-40)

இயேசு இந்த கற்பனைகளைப் பழைய ஏற்பாட்டிலிருந்து, உபாகமம் 6:5 மற்றும் லேவியராகமம் 19:18லிருந்து எடுத்துக்கூறினார். பழைய ஏற்பாடா யினும் சரி, புதிய ஏற்பாடாயினும் சரி, தேவனுக்குப் பிரியமான உறவு குறித்த மார்க்கம் ஒன்றே.

> *"உண்மையாய்த் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவி யோடும் உண்மையோடும் தொழுது கொள்ளுங் காலம் வரும் ... தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர் களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்".* (யோவான் 4:23).

உண்மை ஆராதனை என்றால் தேவனை மகிமைப்படுத்துவது ஆகும். நாம் தேவனை மகிமைப்படுத்தும்படி எதைச்செய்தாலும், ஜெபம், பாடல், துதி, உபவாசம் அல்லது விருந்து, அப்பம் பிட்டு திராட்சை ரசம் பருகுதல், தானம், சகோதர அன்பு, கண்டித்தல், தசமபாகம், காணிக்கை கொடுத்தல், போதனை அல்லது தலைமைத் தாங்குதல் எதுவாயினும் நாம் அவரைப் பிரியப்படுத்துகிறோம். நாம் அவ்வாறு அவரைப் பிரியப் படுத்தும்போது, சரியான வழியில் அவரை ஆராதிக்கிறோம்.

> *"நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக் கடவோம்:"* (சங்கீதம் 95:6).

## பழைய ஏற்பாட்டின் கீழ் ஆராதனை

தேவன் இஸ்ரவேலருக்குத் தந்த கற்பனைகள் நேரடியானது: நீ என்னில் அன்புகூர்ந்து கீழ்ப்படி, அப்போது உன்னை ஆசீர்வதிப்பேன். கீழ்ப்படியாதிருந்தால் நான் உன்னைத் தண்டிப்பேன்:

> *"நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்பு கூர்ந்து அவரைச் சேவிக்கும்படி, நான் இன்று உங்களுக்குக் கற்பிக்கிற என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தால் ... நான் ஏற்ற காலத்தில் உங்கள் தேசத்தில் முன்மாரியையும் பின்மாரியையும் பெய்யப்பண்ணி, ... நீ சாப்பிட்டுத் திருப்தியடைவாய். உங்கள் இருதயம் வஞ்சிக்கப்படாமலும், நீங்கள் வழிவிலகி அந்நிய தேவர்களைச் சேவித்து அவர்களை நமஸ்கரியாமலும் இருக்கும்படி எச்சரிக்கையாயிருங்கள். இல்லாவிடில் கர்த்தருடைய கோபம்*



> *உங்கள் மேல் மூண்டு, மழை பெய்யாமற் போகவும், தேசம் தன் பலனைக் கொடாமலிருக்கவும் வானத்தை அடைத்துப் போடுவார்:* ((உபாகமம் 11:13-17).

பழைய ஏற்பாட்டு காலத்தில், இஸ்ரவேலர் பலவித வழிமுறைகளைக் கையாண்டு ஆராதிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். அது மோசேயின் நியாயப்பிரமாணமாக இருந்தது. பலி, பொது சுகாதாரம் மற்றும் பரிசுத்த (பண்டிகை) நாட்கள் குறித்த பல கற்பனைகள் ஆசரிப்பின் விளக்கத்துடன் கொடுக்கப்பட்டிருந்தது. ஆராதனைக்கடுத்த கர்பனைக ளுக்கு மனதார கீழ்ப்படிந்தால் அவர்கள் ஆசீர்வாதிக்கப்படுவார்கள் என்ற நியதி இருந்தது.

மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறித்து கவலையீனமாக நடந்து கொண்டவர்களுக்கு அது பிரச்சனையும் ஆசரிக்கச் சிரமமானதாகவும் இருந்தது. ஆனால் அந்த கற்பனைகள் மிகவும் நல்ல நோக்கத்துடனே கொடுக்கப்பட்டது. அதன் வழியாக இஸ்ரவேலர் முழுவதுமாகத் தங்களது சிருஷ்டிகரை நம்பியிருக்கும்படி போதித்தது. வேறு விதமாகக் கூறினால், அந்தக் கற்பனைகள் அவர்கள் தங்களை தாழ்த்தி, உண்மையான தேவனை ஆராதிக்கும்படி கவனமாக இருக்கச் செய்தது. இதில் முக்கியமானது எதுவென்றால், அவர்களது சிந்தனையாகும்: நீ உன் முழு இருதயத்தோடு உன் ஆண்டவரை நேசித்தால், அவரைப் பிரியப்படுத்தும்படி அவருக்குக் கீழ்ப்படிந்திருப்பாய். நீ மனதில்லாமல் கீழ்ப்படிந்தால் அது பொய்யான ஆராதனையாகிவிடும்.

இயேசு தமது நாட்களில் பரிசேயரின் ஆராதனை முறையை எதிர்த்து வன்மையாகக் குரல் கொடுத்தார்: அதில் இப்படியாக உள்ளது.

> *"மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ! நீங்கள் ஒற்தலாமிலும், வெந்தயத்திலும், ஜீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்த வைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள். இவைகளையும் செய்யவேண்டும், அவைகளை யும் விடாதிருக்க வேண்டும். குருடரான வழிகாட்டிகளே, ...வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும். உள்ளேயோ, மரித்தவர்களின் எலும்புகளினாலும், சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும்"* (மத்தேயு 23:23-27).

இந்த வசனங்கள் மிகத்தெளிவான செய்தியைத் தருகின்றன. ஆராதனை என்பது தேவனுக்கு அன்பு செலுத்துவதின் பிரதி கிரியையாக இருக்க வேண்டுமேயொழிய, வெறுமனே கற்பனைகளையும் பாரம்பரியத்தையும் மாத்திரம் பின்பற்றுவதாக இருக்கக்கூடாது.

## புதிய ஏற்பாட்டின் கீழ் ஆராதனை

நாம் தேவனை ஆராதிக்க வேண்டிய வழிமுறையானது பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் ஒரேவிதமாக உள்ளது - அதாவது, ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கவேண்டும்.

புதிய ஏற்பாட்டின் கீழ் மிகக்குறைந்த நியாயப்பிரமாணங்களே உள்ளன. அவைகள் இஸ்ரவேலர் புறக்கணித்த நியாயப்பிரமாணத்தின் கொள்கைகளே ஆகும். இங்கு மறுபடியும் இயேசு பரிசேயரைக் குறித்து கூறின குற்றச்சாட்டை நினைவுகூருங்கள்: “நீங்கள் நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்”. நாம் இப்படிப்பட்ட கொள்கை அளவிலான மற்றவைகளையும் பின்பற்றினால் தான் தேவனுக்குப் பிரியமாக இருக்கமுடியும் இந்த விஷயத்தின் அடிப்படையாகப் பவுல் இவ்வாறு கூறினான்:

> *“அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களைமுன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீகள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை”.* (ரோமர் 12:1)

**தேவனைத் துதிப்பது**

தேவ ஆராதனையின் ஒரு முக்கிய பகுதி என்னவெனில், நாம் அவரிடம் ஜெபித்துப் பாடி துதிக்கும்போது, அவரைக் குறித்து நாம் நினைப்பதை அவரிடம் நாம் கூறுகிறோம். சங்கீதங்களில் அநேக அற்புதமான உதாரணங்கள் துதியைக் குறித்து உள்ளன. அடிக்கடி அவைகள் ஆண்டவருடைய குணாதிசயங்களையும், கடந்த காலத்தில் அவர் ஜனங்களை நடத்தின விதத்தையுங் குறித்து விளக்குகின்றன.

> *“ஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள். ஜனங்களே, எல்லாரும் அவரைப் போற்றுங்கள். அவர் நம்மேல் வைத்த கிருபை பெரியது. கர்த்தரின் உண்மை என்றென்றைக்கும் உள்ளது”* (சங்கீதம் 117:1-2).

## பொருளடக்கம்

ஆராதனை என்பது தேவனுக்கு நமது கடமையைச் செலுத்தும்படி அவர்மேல் நமது மரியாதை, தேவபயம் மற்றும் வணக்கத்தை வெளிப்படுத்துவதாகும். தேவனை ஆராதிப்பது என்றால், அவரை நேசித்து,



அவரை மதித்து, அவருக்குக் கீழ்ப்படிவது ஆகும். நாம் பல வழிகளில் ஆண்டவரை ஆராதிக்கலாம். அதற்காக அவரை நாம் வேண்டிக்கொள்ளலாம், பாடித் துதிக்கலாம், தியானிக்கலாம். மேலும் தன்னார்வ சேவையில் அவருக்கென்று ஊழியஞ் செய்யலாம்.

# பரிசுத்த ஆவியின் வரங்கள், இன்று கிடைக்கின்றனவா?

பெந்தேகொஸ்தெ நாளின் வரங்களால் இன்றைய விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்படு வார்களா? என்ற கேள்வி அடிக்கடி கேட்கப்படுகிறது. சுகமளிக்கும் வரம் அல்லது பலவித பாஷைகள் பேசும் வரம் கிடைத்திருப்பதாக அடிக்கடி கூறப்பட்டாலும், விந்தை என்னவெனில் மற்ற வரங்கள் கிடைத்திருப்பதாக யாரும் கூறுவதில்லை இதன் உண்மை தான் என்ன?



பைபில்தான் உண்மையான வழிகாட்டி. அதன் சான்றுகளெல்லாம் ஒரே ஒரு காரியத்தைச் சுட்டிக் காட்டுகின்றன. ஆவியினானவரின் வரங்கள் கர்த்தர், தமது சபையின் ஆரம்ப காலகட்டத்தில் அதற்கு உதவும் பொருட்டாகக் கொடுத்தார். வரங்கள் தங்கள் வேலையைச் செய்து முடித்தபின் அவைகள் எடுக்கப்பட்டுப் போயின.

**ஆதி சபையும் அதன் பிரச்சினைகளும்**

நற்செய்தியை அறிவித்த அந்நாளைய பிரசங்கிகளுக்கு பிரத்தியட்சமான தெய்வீக உதவி தேவையாயிருந்து என்பதை நாம் கவனிக்கவேண்டும். அவர்கள் போராட வேண்டியிருந்த கஷ்டங்கள், தடைகளைப் பற்றி சற்றே சிந்தித்துப் பாருங்கள்.

அவர்களை ஊக்குவித்து, அவர்கள் செய்வதற்கென அவர் கொடுத்த வேலையை அவர்கள் செய்யும்படி அவரே வழிகாட்டவும் அவர்கள் ஆண்டவர்

இப்போது அவர்களோடு இல்லை. அந்தப் பிரசங்கிகள் செல்வாக்குள்ளவர்களோ, கனவான்களோ அல்ல. ஆனால் - பவுல் அப்போஸ்தலனைத் தவிர மீதிப்பேர் எங்கெங்கோ இருந்து எடுக்கப்பட்ட மிக எளிமையான மக்கள். தங்கள் முயற்சிகளை எத்திசையில் எப்படிச் செலுத்துவது என்பதற்கான புதிய ஏற்பாடு எழுதுவதற்குக் கிடைத்த ஆவியானவர் ஏவும் ஞானமும் அவர்களுக்கு இல்லை. அந்த நாட்களில் தான் பைபிளின் அந்தக் காலப்பகுதி எழுதப்பட்டு வந்தது. அவர்கள் முயற்சிகளை ஆதரிக்கவோ, உயர் நிலையிலுள்ள மக்களை இவர் களுக்காக வற்புறுத்தவோ செல்வாக்குமிக்க ஒரு கூட்ட மக்கள் அங்கு இல்லை. மாறாக, முதலில் அவர்கள் சிதறிப்போன புதிய விசுவாசிகளின் கூட்டமாக இருந்தார்கள். அவர்கள் வாழ்க்கை நெறிமுறையை வழி நடத்த எவ்வித சபை ஒழுங்கு மாதிரிகளும், இல்லாதிருந்தது.

ஆனால், இன்னொரு பக்கம் சந்தேகம் நிலைத்திருக்கும் ஆளுநர்களிட மிருந்து அதிகமான எதிர்ப்பு இருந்தது. அதிலும் புத்திசாலிகளும், பொல்லாதவர்களுமான ஒரு பலத்த கூட்ட பகைவர்களான பரிசேயர் களும் தேவாலயத்தைச் சேர்ந்தவர்களும் விசுவாசிகளை எதிர்த்தார்கள். இத்தகைய துஷ்டர்களுக்கெதிராய், கர்த்தர் ஆவியின் வரங்களால் சீஷர்களை நிரப்பினால் தவிர, அவர்களால் எப்படி முன்னேற முடியும்? இப்படிப்பட்ட உதவியில்லாவிடில் அவர்களுக்கு மிஞ்சிய வேலையை அவர்களால் எப்படிச் செய்யமுடியும்? ஏற்கனவே கூறியபடி, சூழ்நிலைகள் விசேஷித்த விதத்தில் ஆயத்தமாக்கப்பட்ட விசேஷித்த மனிதர்கள் தேவைப்பட்டார்கள். ஆனால் கிறிஸ்தவ நற்செய்தி நன்கு பரப்பப்பட்டு நல்ல முன்னேற்றத்தைக் கண்ட பிறகு, வரங்களுக்கான தேவை ஏற்பட வில்லை. வேதாகம சான்றுகள் அனைத்தும் பரிசுத்த ஆவியின் வரங்கள் பற்றிய இந்த அணுகு முறையை ஆதரிக்கின்றன.

## அப்போஸ்தலர்கள் மூலமே கொடுக்கப்பட்டது.



இக்கேள்விக்கான பதிலை சமாரியாவிலுள்ள விசுவாசிகள் மேல் பரிசுத்த ஆவி வந்த வரலாறு கூறுகிறது (அப்போஸ்தலர் 8).

ஆதி நற்செய்தியாளர்களில் ஒருவரான பிலிப்பு (அப்போஸ்தல ரான பிலிப்பு அல்ல) சமாரியர்கள் மத்தியில் மிகவும் வெற்றிகரமான பிரசங்க ஊழியம் செய்துவந்தார். இதைக் கேள்விபட்ட அப்போஸ் தலர்கள் உடனேயே,



எருசலேகிலிருந்து, அந்த ஊழியத்தை உறுதிப்படுத்தி கைகளை இரட்சிக்கப்பட்டவர்கள் மேல் வைத்து பரிசுத்தாவியின் வரங்களைக் கொடுப்பதற்கு பேதுருவையும் யோவானை யும் அனுப்பினார்கள்.

பிலிப்பு ஏன் தானே அதைச் செய்யவில்லை எனக் கேள்வி எழும்பலாம். அவனிடம் பரிசுத்த ஆவியானவர் இருந்தால் அவன் ஏன் பரிசுத்தாவியின் வரங்களை விசுவாசிகளுக்குக் கொடுக்கவில்லை. பேதுரு, யோவான் மூலமாய் பரிசுத்தாவியானவர் ஏன் கொடுக்கப்பட வேண்டும். பரிசுத்த ஆவியைக் கொடுக்கும் அதிகாரத்தைக் கர்த்தர் அப்போஸ்தலர்களின் கைகளில் மட்டும் தான் கொடுத்தார். வேறு யாரிடமும் கொடுக்கவில்லை என்பது மட்டும் தான் பொருத்த முள்ளதாயிருக்க முடியும்.

## அப்போஸ்தலர்களுக்கு மட்டும்

பணத்தையும், செல்வாக்கையும் சம்பாதிப்பதற்கான பெரிய தருணங் களாக இதைக் கண்ட சீமோனைப்பற்றிய சம்பவம் இம்முடிவை உறுதிப்படுத்துகிறது. அவன் அப்போஸ்தலரிடம், அதே வல்லமையையும் அதிகாரத்தையும் அவனுக்குக் கொடுத்தால் நன்கு பணம் கொடுப்பதாக கூறினான்.



பவுல் அப்போஸ்தலனின் சாட்சி இதுவே. 1.கொரிந்தியர் 13-ல் பரிசுத்த ஆவியானவரின் வரங்களாகிய சுகமளித்தல், அறிவு, பலபாஷை பற்றி பேசிய பின் கீழ்க்கண்டவாறு கூறுகி றார்:

“தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம். அந்நிய பாஷை யானாலும் ஓய்ந்துபோம்; அறி வானாலும் ஒழிந்துபோம். (1.கொரிந்தியர் 13:8).

இப்படி பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு பேசிய அப்போஸ் தலனின் வார்த்தைகள் முடிவா னவை. மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஆவியின் வரங்கள் புதிய விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதிப்படும் வரைக்கும் நல்ல கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் வாழ்க்கை ஸ்திரப்படும் வரைக்கும் சபைக்குக் கொடுக்கப்பட்டன - ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும்.

இன்று முற்றுப்பெற்ற பைபில் ஒன்றுதான் நமக்குத் தேவை. ஏற்கனவே கூறியபடி, அப்போஸ்தலர் காலத்தில் புதிய ஏற்பாடு கொஞ்சங் கொஞ்சமாய் எழுதப்பட்டு வந்தது. அவர்கள் மறைந்தபின் மிகக் குறைந்த எண்ணிக்கையான சபைகளிடம் முழு ஏற்பாடு இருந்திருக்கும்.

## ஆவியின் வல்லமை ஊற்றப்படுதல்

அப்போஸ்தலர் தவிர வேறு எந்த மனிதருக்கும் வல்லமையும் அதிகாரமும் இருந்ததில்லை. ஆனால் இன்னொரு வழியில் ஆவியானவரைப் பெற முடிந்தது - நேரடியாக வானத்திலிருந்து பொழியப் படுதல். இது மிகவும் அபூர்வமானது. நான்கு எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன.

1. நம் ஆண்டவரின் திருமுழுக்கின்போது (மத்தேயு 3:16).
2. பெந்தேகொஸ்தே (அப்போஸ்தலர் 2:1-4).
3. நன்றியுள்ள சகோதரர்களின் கூட்டம் (அப்போஸ்தலர் 4:31).
4. புறஜாதியான் கொர்நெலியுவின் வீட்டார் (அப்போஸ்தலர் 10:44).

ஆகவே, இன்று ஆவியின் வரங்களைப் பெற்றதாகச் சொல்லிக் கொள்கிறவர்கள் பரலோகிலிருந்து நேரடியாக ஆவியினால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும், அல்லது அப்போஸ்தலர் கைகள் வைத்ததனால் பெற்றிருக்க வேண்டும்.

முதல் விஷயம் அபூர்வமானது. இரண்டாவது நடக்க வாய்ப்பே இல்லை. இன்று இந்த வல்லமையைப் பெற்றோம் என்பவர்கள் விஷயத்தில் ஒரு சிக்கல்- அவர்கள் ஆவியானவரைப் பெற்றதாக எப்படிச் சொல்கிறார்கள்?

## எப்போதும் தற்காலிகமானது

முந்தைய சமயங்களில் தேவன் தமது ஆவியை மக்களின் மீது ஊற்றிய போதெல்லாம் கொஞ்ச நேரத்திற்கு, ஒரு விசேஷித்த நோக்கத்திற்காகத் தான். மோசேக்கு அவனுடைய பணியில் உதவியாக தேவ ஆவியினால் ஆசீர்வதிக்கப்பட்ட மூப்பர்கள் எழுபது பேர் இருந்தனர்.

அபிஷேகம் பண்ணப்பட்ட சவுல் தீர்க்கதரிசனம் சொன்னான் (1.சாமுவேல் 10:9-13). ஆனால், அதன்பின், நல்ல ஆவிக்குப் பதில் ஒரு பொல்லாத ஆவி வந்தது (1.சாமுவேல் 16:14). தமது ஊழியகாலத்தில் இயேசு, பன்னிரண்டு பேரையும் பிரசங்கம் பண்ணும்படி அனுப்பியபோது, அவர்களுக்கு ஆவியானவரின் வல்லமையைக் கொடுத்தார் (மாற்கு 6:7,13). ஆனால் சிலகாலம் கழித்து, வலிப்பு வியாதியினால் துன்புற்ற ஒரு சிறுவனை குணமாக்க, அவர்களில் ஒன்பது பேரால் முடியவில்லை (மாற்கு 9:17,18,28,29).



## கடைசி நாட்களில்

கடைசி நாட்களில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் எழுப்புதல் குறித்து வேதாகமம் வாக்களிக்கிறது எனக் கூறப்படுகிறது. அது சரிதான். ஆனால் வேத வசனங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன.

“அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும், குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள் (யோவேல் 2:28).

அப்போஸ்தலனாகிய பேதுரு இந்த வார்த்தைகளைப் பெந்தேகொஸ்தே நாளில் மேற்கோள் காட்டி (அப்போஸ்தலர் உ:கஎ) அவர் காலத்தில் எருசலேமிலிருந்த யூதர்களுக்கு விளக்கினார். இந்த வாக்குத்தத்தம் இன்னும் நிறைவேற வேண்டியுள்ளது. அது விசுவாசிகளான யூதர்மேல் ஆசீர்வாதமாக எருசலேமில் துவங்கவேண்டும். ஏனெனில் யொவேல் எருசலேமிலுள்ள சீயோன் மலையைப் பற்றிக் குறிப்பிடுகிறார் (Å.32): அதன் பின் முதல் நூற்றாண்டில் நட,ந்ததுபோல விசுவாசிக்கிற புறஜாதியாருக்குப் பரவும் இன்றைய பரவச இயக்கத்தைச் சார்ந்தவர்கள் எருசலேமிலுள்ள சீயோன் மலையில் உள்ளவர்கள் அல்ல. ஆகவே அவர்கள் கூற்று சந்தேகத்திற்குரியதே.

## வரங்கள் இல்லாமற் போகும்

இறுதியாக, பவுலடியார் கூறினவைகளை சமசீர்நிலையில் கவனிப்போம்:

*“நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும் அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைதாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கத்தரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பெயர்க்கத் தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாய் இருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை...அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம். அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம். அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது. நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒஇந்துபோம்”* (1. கொரிந்தியர் 13: 1-2, 8-10).

# வேதாகம சத்தியத்திற்கான சான்று- காலத்துக்கு முந்திய மோசேயின் நியாயப்பிரமாணம் - நீர்ப் பங்கீடும் கழிவுகளை அகற்றுதலும்



ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, ஆதி இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின் ஒரு குறிப்பிட்ட முறையை இப்பகுதி காண்பிக்கும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் இந்த நியாயப்பிரமாணத்திலுள்ளவற்றைக் கண்டுபிடித்து, அவைகளைக் கூடக் கைக்கொள்ள ஆரம்பித்தன. இச்சமயம் ‘நீர்ப் பங்கீடு மற்றும் கழிவுகளை அகற்றல் குறித்த வேதாகம விதிகளை, ஆலோசனைகளைக் காண்போம். அவைகளைக் கைக்கொண்டால், இன்று இவ்வுலகில் நமக்குள்ள பிரச்சினைகள் குறையும்.

## அ) நீர்ப் பங்கீட்டுக்கு வேதாகமம் காட்டும் வழி.

கொடுக்கப்படும் நீர் சுத்தமானதா என உறுதி செய்து கொள்ள எப்படி கவனமாயிருக்க வேண்டுமென மோசேயின் பிரமாணம் காட்டுகிறது. பாத்திரத்தில் செத்த மிருகம் காணப்பட்டால், அந்தத் தண்ணீர் பயன்படுத்தப்படக் கூடாது. சாப்பிடக்கூடாத மிருகங்களைப் பட்டியலிட்ட பின்னர் பிரமாணம் கூறுவதாவது:

*“அவைகளில் செத்தது ஒன்று யாதொன்றின் மேல் விழுந்தால் அது தீட்டுப்பட்டிருக்கும் ...அவைகளில் ஒன்று மண்பாண்டத்திற்குள் விழுந்தால் அதற்குள் இருக்கிறவை யாவும் தீட்டுப்பட்டிருக்கும்; அதை உடைத்துப் போடவேண்டும் ... குடிக்கத்தக்க எந்தப் பானமும் அப்படிப்பட்ட*



*பாத்திரத்தினால் தீட்டுப்படும் ... ஆனாலும் நீரூற்றும் மிகுந்த ஜலம் உண்டாகிய கிணறும் சுத்தமாயிருக்கும்; அவைகளிலுள்ள உடலைத் தொடுகிறவனோ தீட்டுப்படுவான்”* (லேவியராகமம் 11:32-36).

குடி தண்ணீருள்ள பாத்திரத்தில் ஒரு செத்த விலங்கு காணப்பட்டால் அப்பாத்திரம் சுத்தம் செய்யப்பட வேண்டும். ஆனால் ஆற்றில் ஓடுகின்ற நீருக்கோ, நீரூற்றுக்கோ இந்த விதி பொருந்தாது என்பதைக் கவனியுங்கள். தேங்கி நிற்கும் நீரைக் காட்டிலும் ஓடுகின்ற நீர் வியாதியைக் கொடுக்கும் வாய்ப்பு குறைவு. ஆற்றுநீருக்கு, சுனை குணம் உண்டு என அறிந்திருக்கிறார்கள். ஆகவே மரப்பாத்திரம் செத்த மிருகத்தோடு தொடர்பு கொண்டிருந்தால், அதைக் கழுவினால் போதும். மோசேயின் விதிகள் வெகுகாலத்திற்கு முன்னமே மிகச் சரியாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

❖ குடிப்பதற்கான தண்ணீர் ஓடும் நீருள்ள ஓடையில் செத்த மிருகம் இருந்தாலும் எடுக்கப்படலாம்.
❖ செத்த மிருகம் இருந்த மண் பாண்டம் உடைக்கப்படவேண்டும்
❖ மரப்பத்திரங்களுக்கு இந்த விதி கிடையாது.

## ஆ) கழிவுகளை அகற்றுவதற்கு வேதாகமம் காட்டும் வழி.



வேதாகமம் இதிலும் இன்றைய காலத்திற்கு ஏற்ப கூறுகிறது. கழிவு, மற்றும் கழிவு நீரைச் சுத்தப்படுத்துவதற்கான தொட்டிகள் கட்டுமானங்களைக் கட்டி, அந்நீரைப் பாதுகாப்பானதாகச் செய்கிறோம். இத்தகைய வேலைகள் ஆரம்பிக்குமுன் மோசே கூறிய விதியின்படி குடியிருப்புகளுக்கு அப்பால் தூரமான இடத்தில் கழிவை மூடிப்போட வேண்டும்.

*“நீ வெளிக்குப் போயிருக்கத் தக்க இடம் பாளயத்திற்குப் புறம்பே இருக்கவேண்டும். உன் ஆயுதங்களோடே ஒரு சிறு கோலும் உன்னிடத்தில் இருக்கக்கடவது; நீ மலஜலாதிக்குப் போகும்போது, அதனால் மண்ணைத் தோண்டி, மலஜலாதிக்கிருந்து, உன்னிலிருந்து கழிந்துப் போனதை மூடிப்போடக்கடவாய்”* (உபாகமம் 23:12,13}.

இந்தப் புத்திமதியைப் பின்பற்றாததினால் டைஃபாயிட் (குடல்புண் காய்ச்சல்), சீதபேதியும் அநேக ராணுவங்களைத் தாக்கி தோல்வியுறச் செய்துள்ளன. 1914-18 யுத்தம் வரை மனிதக் கழிவு அப்படியே விடப்பட்டு, அதனால் தண்ணீர் மாசுபட்டது. ஈக்கள் அதன்மேல் அமர்ந்து பின்னர் உணவில் நோய்க் கிருமிகளைக் கடத்தின. இதற்கு மாறாக, மோசேயின் பிரமாணத்தை அடிப்படையாகக் கொண்ட டால்முட் என்ற யூத சட்டம் நவீன முறைகளை, முதல் நூற்றாண்டிலேயே பொது சுகாரத்திற்கென உபயோகித்தது. எருசலேம் போன்ற பட்டணங்களுக்குள் குப்பை கூளங்கள் குவித்து வைப்பதை டால்மூட் அனுமதிக்கவில்லை. எருசலேமிற்கு வெளியே இன்னோம் பள்ளத்தாக்கில் நெருப்பு எரிந்துக் கொண்டிருந்தது பொது இன்சினரேற்றர் போல ஈக்களால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த இது சிறந்த முறை.

**குடியிருப்புக்கு வெளியே கழிவுகள் புதைக்கப்பட வேண்டும்.**
**காலத்துக்கு முந்திய ஒரு பிரமாணம்**

# தேவனோடு உறவாடுதல்

தொலைவிலுள்ள நம் அன்புக்குரியவர்களோடு பேசுவது எப்போதுமே இன்பம் தருவதாகும். வெகு காலம் பார்க்காமலிருப்பவர்களுடன் ‘நாம் மிக நெருக்கமாக இருந்து பேசுவது போன்ற உணர்வைத் தந்து உதவுவது தொலைபேசி. சரியான ஒருவரிடமிருந்து வரும் ஒரு தொலைப்பேசி அழைப்பு, நம் இதயத்தை மகிழ்ச்சியால் நிரப்புகிறது. நம்மை அழைத்தவரின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப, தொலைப்பேசி அழைப்பு நம்மில் ஏற்படுத்தும் பரபரப்பின் அளவு இருக்கும். சற்று பக்கத்தில் இருப்பவர் அல்லது அடிக்கடி அழைப்பவரின் அழைப்பாயிருந்தால், அதைச் சாதாரணமாக எடுத்துக்கொண்டு ஏதோ கடமைக்கெனப் பேசுவோம். ஆனால் தொலைவிலிருந்து, மிக முக்கியமானதொரு நபரிடமிருந்து வரும் அழைப்பென்றால், நாம் பேசும்போது நம் குரல் பரபரப்பு





மிகுதியால் நடுங்கலாம்.

உலகப் புகழ்பெற்ற ஒருவரிடம் பேசும் வாய்ப்பு நம்மில் சிலருக்கும் கூட கிடைத்ததில்லை. ஆனால் மிகமுக்கியமான பிரமுகர் ஒருவர் நம்மிடம் தொலைப்பேசியில் பேசும்போது, நம்மைச் சுற்றியுள்ள எல்லாவற்றையும் மறந்துவிடுகிறோம். மதிப்பிற்குரிய அந்த நண்பரிடம் பேசும்பொழுது நாம் என்ன பேசுகிறோம், கேட்கிறோம் என்பதில் மட்டுமே நம் கவனத்தைச் செலுத்துகிறோம்.

தேவன் எவ்வளவு மகா பெரியவர் என்பதை யோசிக்கும்போது, அவர் நம் ஜெபத்தைக் கேட்கிறார் என்ற உண்மையை நாம் புரிந்து கொள்வதற்குக் கடினமாயிருக்கிறது. இருப்பினும் நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் (ஜெபம்) மிகுந்த பலனுள்ளதாயிருக்கிறது என்று உறுதி தரப்படுகிறது. “கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்தே இருக்கிறது”.

உண்மையில், நாம் தேவனிடம் ஜெபிக்கும்போது, அவரிடம் பேசிக்கொண்டிருக்கிறோம். ஒரு பிரமுகரிடம் நாம் என்ன பேசுகிறோம் என்பதைக் குறித்து கவனமுள்ளவர்களாயிருக்கிறோம் என்றால், வானத்தையும் பூமியையும் படைத்தவரிடம் பேசும்பொழுது இன்னும் எவ்வளவு கவனத்துடன் இருக்கவேண்டும். “தேவ சமூகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம் பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு; தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக” என்று சாலொமோன் கூறுவதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

ஜெபம் என்பது என்ன அற்புதமான விஷயம்! தேவன் பரலோகத்திலும் நாம் பூமியிலும் இருந்தால் கூட, நாம் அவரோடு பேசவேண்டும் என அவர் விரும்புகிறார். “நீங்கள் கூடி வந்து என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவி கொடுப்பேன். உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால். எனைத் தேடுகையில் கண்டுப்பிடிப்பீர்கள்”.

பகலிலோ, இரவிலோ, எந்த நேரத்திலும் நாம் ஜெபத்தின் மூலமாய் தேவனிடம் பேசலாம். அவர் நாம் பேசுவதைக் கேட்கிறார். இன்னொரு மனிதனிடம் நாம் பேசும்போது இது மாதிரி இருப்பதில்லை. பகல் நேரங்களில் மட்டும் பேசுவோம், அல்லது அடுத்தவர் ஏதோ பட்டத்தில் இருப்பதால் பேசமுடியாமல் போகலாம். ஆனால் நாம் ஏற்றபடி அவரை அண்டினால், நம் பரம பிதாவின் செவிகள் எப்போதும் நம் கூப்பிடுதலைக் கேட்கத் திறந்தே இருக்கும்.

நம் அன்றாட வாழ்க்கையில் ஒரு முக்கியமானதும் நிஜமானதுமான பகுதியாக ஜெபத்தை வைக்கவேண்டியது அவசியம். இயேசுவானவர் அடிக்கடி இரவு நேரத்தை ஜெபத்தில் செலவிட்டார். தேவ குமாரனுக்கே பிதா தரும் பலமும் ஐக்கியமும் தேவைப்பட்டது என்றால், ஜெபத்தின் மூலமாக மட்டுமே வரக்கூடிய உதவியும் பெலமும் நமக்கு எவ்வளவு அதிகமாகத் தேவை.

நம் ஜெபங்கள், அன்பும் இரக்கமுமுள்ள பரமபிதாவிடம் நம் இதயங்கள் அப்படியே ஊற்றிவிடுகிறதாயிருக்க வேண்டும். “நாம் தேவனிடத்தில் சேரவேண்டும்; அப்பொழுது அவர் நம்மிடத்தில் சேருவார்”. யாக்கோபு எச்சரிக்கும் குழிகளில் விழாதபடி, நாம் அவைகளைத் தவிர்க்கவேண்டும். ஏனெனில் அவர் காலத்தில் சிலர் விண்ணப்பம் பண்ணியும் பெற்றுக் கொள்ளவில்லை; ஏனெனில் அவர்கள் தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணினார்கள்.



கஷ்டத்தில் மாட்டிக் கொண்ட பிள்ளை, உதவிக்கு தன் தந்தையைக் கூப்பிட விரும்பும். அதன் நிலையைக் குறித்து அக்கறை கொள்ளும் ஒருவரிடம் கூறிய பிறகு நிம்மதியா யிருக்கும். சில சமயங்களில் அவர் உதவி செய்யக்கூடும்; சில சமயங்களில் உதவி செய்யக் கூடாமற் போகும். ஆனால் நாம் எல்லாருமே தேவனுடைய பிள்ளைகளாக, தேவையான சமயத்தில் நம் பிதாவிடம் செல்லலாம். அவர் உதவி செய்வார் என்பதை நாம் அறிவோம். *“இதோ, இரட்சிக்கக்கூடாதபடிக்குக் கர்த்தருடைய கை குறுகிப்போகவுமில்லை; கேட்கக்கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை”* ஏசாயா ருகூ:க.



# என் வாழ்வை மாற்றின நாட்கள் - பவுல் எனவும் அழைக்கப்பட்ட சவுல்

அந்த விளைவு, மீதமுள்ள என் வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்கின்றது. மேலும் என்ன ஒரு மாற்றத்தை அந்த நாள் செய்தது. வயது சென்ற பவுலாகிய நான் இப்பொழுது இங்கே இந்த குளிர் மிகுந்து ஈரமான சிறைசாலையில் உட்கார்ந்துள்ளேன். என் வாழ்க்கை விரைவில் ஒரு ரோம போர்வீரனின் கைகளினால் நிச்சயமாக முடிவு பெறபோகின்றது. ஆனாலும் நான் எனது இறுதி கடிதங்களை எழுதும்போது அவற்றை எல்லாம் நினைவுகூரும் நேரம் உள்ளது.

## பரிசேயனாகிய சவுல்:



அப்பொழுது நான் உறுதியான, வேக துடிப்புடன் இருந்த வைராக்கியமான ஒரு இளம் பரிசேயன். ரபி கமாலியேல் என்னும் பிரசித்திபெற்ற ஒருவரிடம் மிக உன்னதமான சர்வகலாசாலை கல்விக்கு பின்னர் சனகெரிபில் வேலைச்ய்து நான் கற்றவைகளை நடைமுறைக்கு கொண்டு வந்தேன். கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்ட புதிய யூதமத பிரிவினரை குறித்து அதிகமாக கேள்விப்பட்டுள்ளேன். அவர்களில் சிலரை சந்தித்தும் உள்ளேன். ஆனால் அவர்கள் யூத சமுதாயத்தைப் பிரிக்கின்ற தொந்தரவாளர்களாக இருந்தார்கள். அவர்கள் நியாயப்பிரமாணத்தை கடைப்பிடிக்க தவறியும், அவர்களின் தலைவரான நசரேயனாகிய இயேசுவே எதிர்பார்க்கப்படும் மேசியாவென உரிமைக் கொண்டாடினார்கள். முப்பது வருடங்களுக்கு முன்னரும் வரப்போகும் மேசியாவைப் பற்றிய பேச்சுகள் நடந்துக் கொண்டிருந்தது. ஆனால் அது எதுவும் நடக்கவில்லை.

கிறிஸ்தவர்கள் மோசேயின் மூலமாக நமக்கு கொடுக்கப்பட்ட மேன்மையான பிரமாணங்களைப் புறக்கணித்ததைக் காணும்போது அது எனக்கு கோபத்தை அளித்தது. நாம் அதைச் செய்ததற்காகவே தேவன் நம்மை நேபுகாத்நேச்சாரின் காலத்தில் நாட்டைவிட்டு வெளியேற்றினார். தேவனுடைய தேசத்தில் இருந்து மீண்டும் நம்மை வெளியேற்றச் செய்யத்தூண்டும் எந்த மார்க்கமும் எழும்பக்கூடாதபடி நான் அதைக்

குறித்து ஏதாவது செய்யவேண்டும். நமது யூதத் தலைவர்களுக்கும் ரோம ஆக்ரமிப்பாளர்களுக்கும் இடையில் உள்ள மிக நல்ல நேரங்களிலும் கூட மிக எளிதில் உடையும்படி உள்ளது. இயேசு ராஜாவே எங்கள் தலைவர் என எண்ணும் இப்படி ஒரு மத சார்பினர் எழும்பினால் என்ன ஆவது

## பரவிக்கொண்டு இருக்கும் மதப்பிரிவு

நசரேயனாகிய இயேசு சிலுவையில் அறையப்பட்டப் பின்னர் எல்லா பிரச்சனைகளும் முடிந்தது போல காணப்பட்டது மற்ற கலக்காரர்களின் முடிவே அவருக்கும் கிடைத்தது என்றாலும் அவர் மரணமடைந்த சில நாட்களில் இயேசு உயிரோடு எழுந்தார் என்றும், தேவனுடைய ராஜ்யம் மீண்டுமாக எருசலேமிலே ஸ்தாபிக்கப்படும் வரைக்கும் அவர் பரலோகத்தில் தேவனுடன் இருக்கின்றார் எனவும் அவருடைய சீஷர்கள் கூறினதால் மீண்டும் விவாதம் கிளம்பியது என்ன தேவதூஷணம்! பிரச்சனை மோசமாகியது ஏனென்றால் இயேசுவின் சரீரத்தை யாரும் காண இயலவில்லை, மேலும் அவர் நாமத்தினாலே நடைபெற்ற அற்புதங்களைக் குறித்து ஆச்சரியமான கதைகளும் இருந்தது. அதிகாரிகள் இந்த மார்க்கத்தினர் பரவுதைத் தடுக்க முயன்றனர். நானும் அவர்களுடன் உழைத்து கிறிஸ்தவர்களை இனங்கண்டு காவலில் போடுவித்தோம். இந்த மார்க்கத்தினரை முற்றிலுமாக அழிப்பதே பாதுகாப்பான திட்டம் என்று நான் விசுவாசித்தேன். அதை நிறைவேற்ற கடினமாக உழைத்தேன். மேலும் ஸ்தேவான் என்ற கிறிஸ்தவன் தேவாலயத்திற்கு விரோதமாக தேவதூஷணம் செய்ததாகப் பொய்க் காரணம் காட்டி கல்லெறிந்து கொல்லப்பட்டபோது நான் தலைவனாக இருந்தேன்.

## வாழ்க்கையில் மாற்றம்

அந்த நாள் ஒரு மதியவேளை, இன்னும் அதிகமான கிறிஸ்தவர்களை முடிவுகட்ட தமஸ்குவிற்கு நான் பிரயாணமாக சென்றுக்கொண்டு இருந்தபொழுது அது நிகழ்ந்தது. அதிக வெப்பமாக இருந்தபோதிலும் என் பயணத்தை வேகமாக முடிக்க தீர்மானித்தேன். செய்ய வேண்டிய வேலை இருந்தது. மேலும் பிரதான ஆசாரியர் தந்திருந்த அறிமுக கடிதங்களும் என்னிடம் இருந்தது. திடீரென்று ஒரு பேரொளி என் கண்களின் மீது பிரகாசித்தது. அது சூரியன் அல்ல, அதைவிட மிகப்பிரகாசமாய் இருந்தது. மேலும் சூரியவெளிச்சம் எனக்கு பழக்கமானது. அது என்னைத் தாக்கி முற்றிலும் பார்வையற்றவனாக்கியது. நான் எனது குதிரையின் மேல் இருந்து கீழே விழுந்தேன். ஆனால் அந்த சத்தம் மிக அதிகமாக என்னுள் அவர்களால் அந்த சம்பாஷணையை அறியமுடியவில்லை. ஆனால் என்னால் முடிந்தது. அந்த சத்தம் தான் இயேசு எனவும் அவரை நான்





துன்பப்படுத்துவதாகவும் குற்றம் சாட்டியது. மூன்று நாட்கள் நான் பார்வை அற்றவனானேன். வேதத்தினை குறித்த எனது கருத்துக்களைப் பரிசீலனை செய்யும்படியான நேரம் அது இயேசுவிடமிருந்து கிடைத்த அந்த நேரடியான வெளிப்பாட்டினால் ஏற்பட்ட அதிர்ச்சியானது நான் எவ்வளவு புத்தியற்றவனாக இருந்து இருக்கிறேன் என்று என்னை உணரச் செய்தது. அவர் உயிரோடு இருக்கின்றார். அவரே மேசியா நமக்கு சத்தியத்தைச் சொல்ல முயன்றவர்களையே நான் கொலைச் செய்துக்கொண்டு துன்புறுத்திக் கொண்டும் இருந்துள்ளேன். அப்படி செய்ததன் நிமித்தம் அவரையும் துன்புறுத்தியுள்ளேன். எனது விசுவாசமும் செய்கைகளும் எவ்வளவு தவறானவைகளாக இருந்தது.நான் பார்வை அடையும்படிக்கும் ஞானஸ்நானம் பெறும்படிக்கும் அனனியா என்னிடம் வரும் முன்னர் அவருக்கு எவ்வித தயக்கமும் சந்தேகமும் இல்லை.

எனது மீதியான நாட்களை நான் செய்த தவற்றினிமித்தம் இழந்துவிட்ட நேரத்தை ஈடு செய்வதின் மூலம் செலவழித்தேன். நான் நினைக்கின்றேன். என் உள்ளத்தில் நான் உணர்ந்திருந்தேன். இயேசுவின் காரியங்கள் அனைத்தும் உண்மையென்று, ஆனால் யூத சமுதாயத்தில் எனக்கிருந்த அந்தஸ்தாலும் ஏன் பெருமையாலும் அதை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இயேசுவே தனிப்பட்ட வகையில் வந்து எனக்கு காட்சி அளிப்பதற்கு நான் எவ்வளவு கடின இருதயமுள்ளவனாக இருந்திருக்க வேண்டும். மற்றவர்களாவது எனது தவற்றின் மூலம் இப்பொழுது கற்றுக்கொள்ள வேண்டும். நம் வாழ்க்கையை மாற்றும் நிகழ்ச்சிகள் அனேக விதத்தில் நடைபெறுகிறது. என்னுடையது நாடகம் போன்றது. மறக்க இயலாத ஒரு நாள்! ஆனால் இயேசு எனக்கு வாக்குத்தத்தம் செய்துள்ளார். அது என்னவெனில் அது என்னவெனில் நான் எனது பெருமையை விட்டு என்னுடைய பழைய காரியங்களுக்காக மனம் வருந்தி அவருடைய தியாகத்திற்கும் அன்பிற்கும் பதில் கொடுத்தால் அவருடைய ராஜ்யத்தில் எனக்கு ஒரு கிரீடம் காத்துக்கொண்டு இருக்கின்றது என்பதே. அவருடைய ராஜ்யத்திற்காக எதிர்பார்த்துக் கொண்டு அவரை மறுபடியும் காணும்வரை எனக்கு இளைப்பாறுதல் இல்லை.

**- சிந்தியா மல்ஸ்.**